பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

27 10 2024 **SUNDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளைஞர்களின் படைப்பாற்றலுக்கு அனிமேஷன் துறை புதிய உத்வேகத்தை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. குடியிருப்புப்பகுதிகளில் மழைநீர் தேங்காமல் இருப்பதை உறுதி செய்ய நிரந்தர தீர்வுகாணப்படும் என்று மாநில அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

4. திருநெல்வேலி, தென்காசி மாவட்ட மலைப்பகுதிகள், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 260 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் அனிமேஷன் துறையில் இளைஞர்கள் சாதனை படைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

<u>*(சவுண்ட் பைட் - பிரதமர் -(1) - 80 செகண்ட்ஸ்)*</u>

டிஜிட்டல் பாதுகாப்பின் மூன்று முக்கிய அம்சங்கள் குறித்து இளைஞர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் -(2) - 80 செகண்ட்ஸ்)*

நாட்டின் இலக்கியங்கள் மற்றும் கலைகள் பிற நாடுகள் உடனான கலாச்சாரத்திற்கான பாலமாக திகழ்கிறது என்று திரு நரேந்திர மோடி கூறினார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் -(3) - 72 செகண்ட்ஸ்)*

சுயசார்பு இந்தியா இயக்கம் அனைத்துத்துறைகளிலும் மகத்தான சாதனைகளை படைக்க உத்வேகம் அளிப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் எவ்வித சமசரத்திற்கும் இடமில்லை என்று உறுதிபட கூறினார்.

ரஷ்யா – உக்ரைன் மற்றும் இஸ்ரேல் - ஈரான் நாடுகளுக்கு இடையேயான போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

வருங்காலங்களில் குடியிருப்புப்பகுதிகளில் மழைநீர் தேங்காமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் நிரந்தர தீர்வுகாணப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

மதுரையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப்பணிகளை இன்று அவர் ஆய்வு செய்தார்.

பந்தல்குடி கால்வாயின் இருபுறமும் 90 கோடி ரூபாய் செலவில் தடுப்புச்சுவர் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

அனைத்து நிலைகளிலும் ஊழலை அகற்றுவதே தமது கட்சியின் முக்கிய குறிக்கோள் என்று தமிழக வெற்றிக்கழகத் தலைவர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில், கட்சி தொண்டர்கள் இடையே உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அனைவரின் முன்னேற்றத்தையும் கருத்தில்கொண்டு, தமது கட்சி செயல்படும் என்று திரு விஜய் கூறினார்.

<<<<<<>>>>>

திருநெல்வேலி, தென்காசி மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 34 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயணம் செய்யும் வகையில், வீல் சேருடன் பயணிக்கும் வசதியுடன் புதிய தாழ்தள சிறப்பு பேருந்து சேவையை மாநில அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் இன்று மதுரையில் தொடங்கிவைத்தார்.

---------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில், சுற்றுச்சூழலை பாதுகாக்க மரம் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது

-------------

தூத்துக்குடியில் உள்ள பழமைவாய்ந்த சிவன் கோவிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 260 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 12 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 57 ரன் எடுத்துள்ளது.

அஹமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 259 ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று, இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<END>>>>>